மாலை முரசு

பக்கங்கள் 18

## ஜனாதிபதி ரணில் வடக்குக்கு விஜயம்

ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க எதிர் வரும் ஜனவரி மாதம் 6ஆம் திகதி வடக்கு மாகாணத்துக்கு வருகை தரவுள்ளார் என்று தெரிவிக்கப்படுகின்றது.

வவுனியாவில் இடம்பெறும் 04

முழக்கம்: 01 வள்ளுவ ஆண்டு 2054 கார்த்திகை 30 செவ்வாய்க்கிழமை 19.12.2023 அதிர்வு 141

# தமிழர்கள் விவகாரத்தில் இரட்டை வேடம் போடாதீர்!

## ரணிலுக்கு மனோ எச்சரிக்கை

"உலகத் தமிழர் பேரவை அங்கத்தவர்களை, தடை நீக்கம் செய்து அழைத்து ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பேசுவது நல்லதே. அதை நான் வரவேற்கின்றேன். ஆனால், அவர் உள்நாட்டில் தமிழருக்குத் தொடர்ந்து தவறான சமிக்ஞைகளைத் தருகின்றார். இதில் ஒன்று, மக்களுடன் எந்த வித நேரடித் தொடர்புகளும் இல்லாத அமைச்சர் டிரான் அலஸின் பேச்சைக் கேட்டு, எனது தொகுதி கொழும்பில் மீண்டும் பொலிஸ் பதிவுகளை ஆரம்பித்துள்ளமை ஆகும். இரண்டாவது, வடக்கு, கிழக்கிலாவாது மாகாண சபைத் தேர்தல்களை நடத்தி அங்கே மாகாண சபைகளை ஏற்படுத்த ரணில் தயாரில்லை என்பதாகும். மூன்றாவது, வரவு - செலவுத் திட்டத்தில் ரணில் உறுதியளித்த, மலைநாட்டில் 10 பேர்ச் காணி வழங்கல் பொறுப்பையும், அதற்கு ஒதுக்கப்பட்டதாகக் கூறப்படும் 400 கோடி ரூபாவையும் இப்போது யார் வைத்திருக்கின்றார்கள் என்பது தெரியாமையாகும்."

04



# அலெக்ஸ் படுகொலை வழக்கு ஜனவரி 2 இற்கு ஒத்திவைப்பு

## இன்று பெருமளவு சட்டத்தரணிகள் உயிரிழந்த இளைஞருக்காக ஆஜர்

(எஸ்.நிதர்ஷன், ந.லோகதயாளன்)

யாழ்ப்பாணம், வட்டுக்கோட்டை இளைஞர் நாகராசா அலெக்ஸ் படுகொலை வழக்கில் மரண விசாரணை தொடர்பான கட்டளை எதிர்வரும் ஜனவரி 2ஆம் திகதி வழங்கப்படவுள்ளது.

யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் இன்று வழக்கு விசாரணைக்கு எடுத்துக்கொள்ளப்பட்டபோது மரணித்த நபரை மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்திய பொலிஸார், வட்டுக்கோட்டை பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி 04



உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்-Bonding Tamils Globally



# போதைப்பொருள் பாவனையாளர்கள் என சந்தேகிக்கப்படும் 46 பேர் யாழில் சிக்கினர்

## மருத்துவ பரிசோதனையின் பின்னர் நீதிமன்றில் ஆஜர்படுத்த நடவடிக்கை

(ந.லோகதயாளன்)

**யாழ். குடாநாட்டில் போதைப் பொருள் பாவனையாளர்கள்எனச் சந்தேகிக்கப்படும் 46 பேர் கைது செய்யப்பட்டு மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.**

யாழ்ப்பாணம் மாவட்டத்தின் பல பொலிஸ் நிலையங்களாலும் கடந்த இரு நாள்களில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கையின்போது கைது செய்யப்பட்ட 23 பேருடன் விசேட அதிரடிப் படையினரால் கைது செய்யப்பட 23 பேருமாக 46 பேர் மருத்துவப் பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டுள்ளனர்.

பரிசோதைக்கு உட்படுத்தப்பட்டவர்களில் போதைப்பொருள் பாவனையாளர்கள் என உறுதிப்படுத்தப்படும் நபர்களை மருத்துவ அறிக்கையுடன் நீதிமன்றங்களில் முற்படுத்தப்பட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.



# கஞ்சா கலந்த மாவாவுடன் இரு இளைஞர்கள் கைது!

(எஸ்.நிதர்ஷன்)

யாழ்ப்பாணம், கொக்குவில் கிழக்கு பகுதியில் இரண்டு இளைஞர்கள் பொலிஸாரால் கைது செய்யப்பட்டனர்.

50 கிராம் கஞ்சா கலந்த மாவாவை உடைமையில் வைத்திருந்தார்கள் என்ற அடிப்படையிலேயே இருவரும் நேற்று இரவு கைது செய்யப்பட்டனர்.

யாழ்ப்பாணம் மாவட்ட பொலிஸ் புலனாய்வுப் பிரிவுக்குக் கிடைத்த தகவலுக்கமைய இந்தக் கைது நடவடிக்கை முன்னெடுக்கப்பட்டது.

சந்தேகநபர்களை யாழ்ப்பாணம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.



# யாழ்ப்பாணத்தில் சீரற்ற காலநிலை தரையிறங்காது திரும்பிய விமானம்!




யாழ்ப்பாணத்தில் நிலவும் சீரற்ற காலநிலை காரணமாக சென்னையில் இருந்து யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்தை வந்தடையவிருந்த விமானம் மீண்டும் சென்னைக்குத் திரும்பியுள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

சென்னை சர்வதேச விமான நிலையத்தில் இருந்து, இன்று யாழ்ப்பாணம் சர்வதேச விமான நிலையத்துக்குப் புறப்பட்ட விமானமே, யாழில் தரையிறங்காது மீளச் சென்னைக்குத் திரும்பியுள்ளது.

இந்த விமானம் இன்று முற்பகல் 11.40 மணிக்குத் தரையிறங்க வேண்டிய நிலையில் சீரற்ற காலநிலை காரணமாக வானில் 30 நிமிடங்களுக்கு மேலாகப் பறந்துள்ளது என்று தெரிவிக்கப்படுகின்றது.

பின்னர் சென்னைக்குத் திரும்பிச் சென்றது என்றும் விமானநிலைய வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

# புதிய தலைவர் தெரிவால் தமிழ் அரசு ஒருபோதும் பிளவடையவே மாட்டாது!

## 65 வயதில் அரசியலில் இருந்து ஓய்வு பெறுவேன் என்கிறார் சுமந்திரன்



(வி.ரி. சகாதேவராஜா)

"புதிய தலைவர் தெரிவால் இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஒருபோதும் பிளவடையாது. அது கட்சிக்கு மேலும் வலுச் சேர்க்கும். எனக்கு இன்னும் இரண்டு மாதங்களில் 60 வயது. 65 வயதில் அரசியலில் இருந்து நான் ஓய்வு பெறுவேன்."

– இவ்வாறு இலங்கைத் தமிழ் அரசுக் கட்சியின் பேச்சாளரும் நாடாளுமன்ற உறுப்பினருமான எம்.ஏ. சுமந்திரன் தெரிவித்தார்.

தமிழ் அரசுக் கட்சியின் காரைதீவு பொதுச் சபை உறுப்பினர்களின் சந்திப்பு நேற்று மாலை காரைதீவு தமிழ் அரசுக் கட்சியின் கிளைத் தலைவரும் முன்னாள் தவிசாளருமான கிருஷ்ணபிள்ளை ஜெயசிறில் தலைமையில் கட்சியின் கிளைப் பணிமனையில் நடைபெற்றது.

இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான தவராசா கலையரசன், இரா. சாணக்கியன் ஆகியோரும் கலந்துகொண்டனர்.

அங்கு சுமந்திரன் எம்.பி. மேலும் தெரிவிக்கையில்,

"இலங்கைத் தமிழ் அரசுக் கட்சி ஜனநாயக சிறப்பம்சம் கொண்ட கட்சியாகும். இப்படியான தலைவர் தெரிவு இரண்டு வருடங்களுக்கு ஒரு தடவை இடம்பெற்றால் கட்சி மேலும் வலுப்பெறும் .

எமது கட்சி போன்று எந்தக் கட்சியிலும் ஜனநாயக விழுமியங்கள் இல்லை.

அகில இலங்கைத் தமிழ்க் காங்கிரஸில் பொன்னம்பலம் என்பவர் மாத்திரம்தான் தலைவராக வரலாம் .

எனக்கு இரண்டு மாதங்களில் 60 வயது. 65 வயதில் அரசியலில் இருந்து இளைப்பாறி விடுவேன்.

எனக்கு முன்னர் இருந்த தலைவர்கள் விட்ட தவறை நான் ஒருபோதும் விடப் போவதில்லை.

2010 இல் இருந்து நான் சம்பந்தனுடன் சேர்ந்து கட்சி செயற்பாடு அத்தனையிலும் பக்கபலமாக இருந்து வந்திருக்கின்றேன். கட்சி மட்ட பேச்சுகள் அனைத்திலும் பங்குபற்றியுள்ளேன். இந்நிலையில், புதிய தலைவர் தெரிவுக்கு நான் சம்மதம் தெரிவித்துள்ளேன்.

அடுத்த கட்ட தேசிய முயற்சிக்குப் புதிய தலைவரை நீங்கள் தேர்வு செய்துகொள்ளுங்கள்." – என்றார்.







# பாடசாலை மாணவன் அதிபரால் துஷ்பிரயோகம்!

## சம்பவத்தை மூடி மறைக்க முயற்சி



(மன்னார் நிருபர்)

மன்னார், கரிசல் பகுதியைச் சேர்ந்த 14 வயது மாணவன் கல்வி கற்கும் பாடசாலை அதிபரால் துஷ்பிரயோகத்துக்கு உள்ளாக்கப்பட்ட சம்பவம் இடம் பெற்றுள்ளது

நேற்றுமுன்தினம் ஞாயிற்றுக் கிழமை பாடசாலை சுற்றுப்புறச் சூழலைச் சுத்தம் செய்யும் நிகழ்வு என அறிவித்து மேற்படி மாணவனை அழைத்து அதிபர் துஷ்பிரயோகத்தை மேற்கொண்டார் என்று தெரியவருகின்றது.

இந்நிலையில், இந்தச் சம்பவம் தொடர்பில் பாதிக்கப்பட்ட மாணவன் பெற்றோருக்கு அறிவித்த நிலையில், பெற்றோர் அன்றைய தினமே பாடசாலை சென்ற நிலையில் அதிபர் பாடசாலையை விட்டு வெளியேறியுள்ளார். மறுநாள் திங்கட்கிழமை பெற்றோர் பாடசாலை சென்ற நிலையில் அதிபர் பாடசாலைக்குச் சமூகமளிக்கவில்லை.

இதையடுத்து அப்பகுதியில் இயங்கும் பள்ளி நிர்வாகத்தினர், பாடசாலை அதிபர் மற்றும் மாணவனை அழைத்து சமரசப் பேச்சில் ஈடுபட்டனர்.

இருப்பினும் பாதிக்கப்பட்ட மாணவனின் குடும்பத்தினர் எருக்கலம்பிட்டி பொலிஸ் நிலையத்தில் முறைப்பாடு செய்யச் சென்ற நிலையில் அங்கு சிறுவர் மற்றும் பெண்கள் பிரிவு இல்லை என அறிவிக்கப்பட்டு மன்னார் பொலிஸ் நிலையத்துக்குச் செல்லுமாறு அறிவுறுத்தல் வழங்கப்பட்டது.

இவ்வாறான பின்னணியில் அதிபரால் இந்தத் துஷ்பிரயோகம் இடம்பெற்ற போதிலும் அதிபர் சார்பாகச் சிலரின் அழுத்தம் மற்றும் சில நிர்வாகத்தினரின் அழுத்தம் காரணமாக இந்த விடயம் மன்னார் பொலிஸாருக்குத் தெரியப்படுத்தப்படவில்லை எனத் தெரியவந்துள்ளது.

இருப்பினும் இந்த விடயத்தில் வலயக் கல்விப் பணிப்பாளர் மற்றும் சம்பந்தப்பட்ட பொலிஸ் பிரிவினர் உடனடியாக நடவடிக்கை மேற்கொள்ள வேண்டும் எனவும், பாதிக்கப்பட்ட மாணவனைச் சட்ட வைத்திய அதிகாரியிடம் காண்பித்து நீதியைப் பெற்றுக் கொடுக்க வேண்டும் எனவும் பொதுமக்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

## முதலாம் பக்கத் தொடர்ச்சிகள்

### ஜனாதிபதி ரணில்...

நிகழ்வில் பங்கேற்பதற்கு வருகை தரும் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க அன்றைய தினம் யாழ்ப்பாணத்தில் நடைபெறும் விசேட மாவட்ட ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்திலும் பங்கேற்கவுள்ளார் என்று கூறப்படுகின்றது.

### தமிழர்கள் விவகாரத்தில்...

– இவ்வாறு தமிழ் முற்போக்குக் கூட்டணியின் தலைவரும் கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான மனோ கணேசன் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் இன்று வெளியிட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் குறிப்பிடப்பட்டுள்ளதாவது:-

“ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவைக் கடந்த வாரம் அவரது நாடாளுமன்ற அலுவலகத்தில் நேரடியாகச் சந்தித்து மூன்று விடயங்கள் குறித்து கேள்விகளை எழுப்பிக் கோரிக்கை விடுத்தேன்.

தற்போது சனத்தொகை புள்ளிவிபரக் கணக்கெடுப்பு சிவில் அதிகாரிகள் செய்யும் வேலைகளுக்கு மேலதிகமாக, உங்கள் அமைச்சர் டிரான் அலஸின் பொலிஸ்காரர்களை தமிழர்களின் வீடுகளுக்கு சிங்களத்தில் மட்டும் படிவங்களுடன் அனுப்பி, சிவில் அதிகாரிகள் செய்யும் வேலைகளை செய்து, எனது தொகுதி கொழும்பில் வாழும் தமிழர் மத்தியில் தேவையற்ற பதட்டங்களை ஏன் ஏற்படுத்துக்கின்றீர்கள்?

குறைந்தபட்சம் உடனடியாக வடக்கு, கிழக்கு மாகாணங்களிலாவது மாகாண சபைத் தேர்தல்களை நடத்தி, அங்கே முதற்கட்டமாக மாகாண சபை நிர்வாகங்களை ஏற்படுத்தலாம். அதை ஏன் இழு, இழு என்று இழுத்துகொண்டே போகின்றீர்கள்?

மலைநாட்டு பெருந்தோட்டங்களில், நீங்கள் வரவு – செலவுத் திட்டத்தில் உறுதியளித்த 10 பேர்ச் காணித் துண்டுகளைப் பெருந்தோட்டங்களில் வாழும் குடும்பங்களுக்கு வழங்கலாம்.

இந்திய, இலங்கை வீடமைப்பு திட்டங்களின் வீடு கட்டும் பணிகள், அரச நிர்வாக கட்டமைப்புகளின் ஊடாக நடைமுறையாக தாமதம் ஆகும். ஆகவே, காணி வழங்கலுக்காக நீங்கள் ஒதுக்கிக்கொண்டுள்ள 400 கோடி ரூபாவைப் பயன்படுத்தி, காணிகளைப் பிரித்து வழங்கலாம். ஆனால், இந்த 10 பேர்ச் காணி வழங்கல் பொறுப்பையும், அதற்கு ஒதுக்கப்பட்டதாகக் கூறப்படும் 400 கோடி ரூபாவையும் இப்போது யார் வைத்திருக்கின்றார்கள்?

இந்தக் கேள்விகளுக்கு ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க பதில் கூற வேண்டும். அல்லது அவருடன் கூட்டுக் குடித்தனம் செய்கின்றவர்கள் பதில் கூற வேண்டும். இவை தொடர்பில் கடந்த வாரம் எதிர்க்கட்சித் தலைவர் அலுவலகம் ஏற்பாடு செய்திருந்த வெளிநாட்டுப் பிரதிநிதிகளுடனான சந்திப்பில், இலங்கைக்கான அமெரிக்கா, இந்தியா, சுவிஸ், நெதர்லாந்து, கனடா, பிரான்ஸ், தென்னாபிரிக்கா, இத்தாலி நாடுகளின் தூதுவர்களும் ஜப்பான், ஆஸ்திரேலியா, பிரிட்டன், நியூசிலாந்து, ஐரோப்பிய யூனியன் ஆகிய நாடுகளின் துணை தூதுவர்களும், முதன்மை அதிகாரிகளும் கலந்துகொண்ட நிகழ்விலும் அவர்களுக்கு விளக்கமாக நான் எடுத்துக் கூறியிருந்தேன்.” – என்றுள்ளது.

### அலெக்ஸ் படுகொலை...

உள்ளிட்ட சிலர் மரண விசாரணையில் சாட்சியம் வழங்கினர்.

இதேவேளை, மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தில் முற்படுத்த முன்னர் உயிரிழந்தவர் தொடர்பாக மேற்கொள்ளப்பட்ட தெல்லிப்பளை சட்ட வைத்திய அதிகாரியின் அறிக்கை, மல்லாகம் நீதிவான் நீதிமன்றத்தின் உத்தரவில் யாழ்ப்பாணம் போதனா வைத்தியசாலையில் உயிரிழந்த நபரை அனுமதித்தமை தொடர்பான மருத்துவ அறிக்கையைச் சமர்ப்பிக்க ஆவன செய்யுமாறு நீதிமன்ற பதிவாளருக்கு யாழ்ப்பாணம் நீதிவான் ஏ.ஏ.ஆனந்தராஜா உத்தரவிட்டார்.

மரண விசாரணை தொடர்பான கட்டளைக்காக எதிர்வரும் ஜனவரி 2ஆம் திகதிக்கு வழக்கு ஒத்திவைக்கப்பட்டது.

வழக்கில் உயிரிழந்த இளைஞர் சார்பில் பெருமளவான சட்டத்தரணிகள் ஆஜராகினர்.

வட்டுக்கோட்டை பொலிஸாரால் கைது செய்யப்பட்ட நாகராசா அலெக்ஸ் எனும் இளைஞர் சித்திரவதைகளுக்கு உள்ளான நிலையில் நவம்பர் 19ஆம் திகதி உயிரிழந்தார்.

# நாட்டில் சீரற்ற காலநிலையால் டெங்கு நோயாளர் அதிகரிப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

நாட்டில் தற்போது நிலவும் மழையு டன் கூடிய சீரற்ற காலநிலையால் என்றுமில்லா வாறு டெங்கு நோயார்க ளின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டு நிலையம் தெரிவித்துள்ளது.

மேல்,சப்ரகமுவ, மத்தி, வடக்கு மற்றும் கிழக்கு மாகாணங்களில் டெங்கு நோய் பரவுவது மிகவும் உக்கிர மடைந்துள்ளது. இதனால் சுகாதார வைத்திய அதிகாரி அலுவலகங்கள் ஊடாக புகை விசுறும் பணிகள் தற் போது ஆரம்பிக்கப்பட்டுள்ளன என்று தேசிய டெங்கு கட்டுப்பாட்டு பிரிவின் பணிப்பாளர் நளின் ஆரியரெட்ண தெரிவித் துள்ளார்.



# கசிப்பு உற்பத்திப் பொருள்களை கொண்டு சென்ற இருவர் கைது!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

கசிப்பு உற்பத்திக்கு பயன்படுத்தும் ஸ்பிரிட்டை பொலிதீன் பைகளில் பொதி செய்து பிளாஸ்டிக் கூடைக்குள் வைத்து தேயிலைக் கொழுந்தை கொண்டு செல் லும் தோறணையில் வாகனத்தில் எடுத்துச் சென்ற சந்தேக நபர்கள் இரு வரை அரநாயக, அம்பலகந்த வீதியில் கோண்கஹமுல்ல பிரதேசத்தில் வைத்து கடந்த ஞாயிற்றுக்கிழமை (17) அரநாயக பொலிஸார் கைது செய்துள்ளனர்.

கைது செய்யப்பட்ட சந்தேக நபர்கள் இருவரும் உடகம பிரதேசத்தைச் சேர்ந்த 30,32 வயதையுடைய இளைஞர்க ளாவர்.

கைது செய்யப்பட்ட இருவரிடம் இருந் தும் பெறப்பட்ட தகவலின் அடிப்படையில் உடகம பிரதேசத்திலுள்ள சந்தேக நபரொருவரின் வீட்டுக்கு பின்னாலுள்ள காட்டுப்பகுதியில் கசிப்பு உற்பத்தி செய்யும் நிலையம் ஒன்றும் கண்டு பிடிக்கப்பட்டுள்ளது.



கேகாலை மாவட்ட பிரதி பொலிஸ்மா அதிபர் ரோகண ராஜபக்ஷவின் பணிப்புரையின் பேரில் அரநாயக பொலிஸ் நிலைய பொறுப்பதிகாரி ராகுல பண்டார தலைமையிலான பொலிஸ் குழுவினர் சந்தேக நபர்கள் இருவரையும் கைது செய்துள்ளனர். கசிப்பு உற்பத்தி பொருள்களையும் மீட்டுள்ளனர்.



# நமது கருத்து

உலகத் தமிழர்களின் உறவுப்பாலம்
259, கோவில் வீதி, நல்லூர், யாழ்ப்பாணம்.
தொலைபேசி :- 021 222 3570
மின்னஞ்சல்:-murasunews2023@gmail.com

## மூளைசாலிகள் வெளியேற்றம்

அந்நிய செலாவணியை ஈட்டல் என்ற பெயரில் இலங்கையில் இருந்து உழைக்கும் தொழிலாளர்களையும், ஊழியர்களையும் அரசே தேடிப் பிடித்து வெளிநாடுகளுக்கு ஏற்றுமதி செய்து வருகின்றது அல்லது அவர்களின் வெளியேற்றத்தை ஊக்குவித்து வருகின்றது.

அதன் மூலம் போதியளவு அந்நிய செலாவணி ஈட்டப்படுகின்றதா என்றால் அதுவும் சந்தேகம்தான்.

மறுபுறம், நாட்டின் நெருக்கடிகளுக்கு முகம் கொடுக்க முடியாது என்ற அச்சத்தில் படித்த புத்திஜீவிகளான துறை சார் நிபுணர்கள் தங்கள் குடும்பங்களுடன் நாட்டை விட்டு வெளியேறி வருகின்றனர். நாடு திறமைசார் ஒரு தலைமுறையை வேகமாக இழந்து வருகின்றது.

நாட்டின் மூல வளத்தில் - வசதி வாய்ப்பில் - கற்றறிந்து, நிபுணத்துவ நிலைக்குத் தேறியவர்கள், நாட்டையும் இங்குள்ள தொழில்துறையையும் விட்டு வெளியேறிக் கொண்டிருக்கின்றமை நாட்டுக்குப் பேரிழப்பாகும். இது மோசமான பாதிப்புகளையும், பின்னடைவுகளையும் ஒட்டு மொத்தமாக நாட்டுக்கு ஏற்படுத்த வல்லது.

■ கடந்த ஆண்டு ஜனவரிக்குப் பின்னர் குறைந்தது ஆயிரத்து 198 மருத்துவர்கள் நாட்டை விட்டு வெளியேறி உள்ளனர். அவர்களின் 348 பேர் விசேட நிபுணர்களாவர்.

■ தகுதியான பணியாளர்கள் இல்லாமையால் 20 கிராமப்புற மருத்துவமனைகள் மூடப்பட்டுள்ளன. சுமார் 400 மருத்துவமனைகளில் பல்வேறு மருத்துவ சேவைகள் பாதிக்கப்பட்டுள்ளன.

■ வங்கித் துறையைப் பொறுத்தவரை 2023 ஜூனில் தோராயமாக 1,500 பேர் நாட்டை விட்டு இடம்பெயர்ந்து உள்ளனர். இந்த ஆண்டு செப்டம்பர் முடிவில் இந்த கணக்கு இரட்டிப்பாகி இருக்கும். இந்த மாத - வருட - இறுதியில் இந்த எண்ணிக்கை இன்னும் மோசமான கட்டத்துக்கு உயர்ந்திருக்கும்.

■ 2022 இல் புலம்பெயர்ந்து சென்றுள்ள இலங்கை மின்சார சபைப் பொறியியலாளர்களின் எண்ணிக்கை மட்டும் நூறுக்கும் அதிகம்.

- நாட்டின் நிதி மூலோபாயத்திற்கான வழி முறைகள் குறித்து ஆராய்வதற்குரிய நாடாளு மன்றத்தின் துறைசார் மேற்பார்வைக் குழுவின் கூட்டத்தில் இந்த அதிர்ச்சி தரும் புள்ளி விவரங்கள் வெளியாகி உள்ளன.

சம்பளப் பிரச்சினை, வரிச் சுமை பற்றிய பீதி ஆகியவை மூளைசாலிகள் வெளியேற்றத்துக்குப் பிரதான காரணம் என்றாலும், அவை மட்டுமே இந்த நிலைமை ஏற்பட்டமைக்கான பின்னணியாகி விடாது.

நாட்டின் ஒட்டுமொத்தப் பொருளாதாரப் பாதிப்புகள் ஏற்படுத்தியுள்ள அவநம்பிக்கையான - நிச்சயமற்ற - போக்கு, இந்த நாட்டில் தங்களின் பிள்ளைகளின் எதிர்காலம் பற்றிய சந்தேக நிலைமை போன்றவையும் மூளைசாலிகள் வெளியேற்றத் திற்குக் காரணமாகின்றன என்று சுட்டப்படுகின்றது.

சொத்துக்கள் சேர்த்து, பெருமளவு உடைமைகளை வைத்திருப்பவர்களிடம் வரி அறவீடுகளைச் செய்ய எத்தனிக்காத அரசு -

பல்வேறு நிறுவனங்கள், தனிநபர்கள், கம் பெனிகளிடமிருந்து பெறப்பட வேண்டிய வரிகளை அறவிட முடியாத ஆட்சித் தரப்பு -

மாதாந்த வேதனம் பெறும் தரப்புகளிடமிருந்து வரியை அறவீடு செய்வது சுலபம் என்பதால், அவர்களை இலக்கு வைத்துத் தொந்தரவு தரும் மோசமான தீர்மானங்களை எடுப்பதே மாத வேதனத்தில் தங்கி இருக்கும் மூளைசாலிகள், நிபுணர்கள், தகுதி பெற்றோர் நாட்டை விட்டு வெளியேறி, புலம்பெயர்ந்து தங்களது வாழ்க்கையை அமைக்க எத்தனிக்கின்றமைக்குப் பிரதான காரணம் என்று சுட்டப்படுகின்றது.

ஆட்சி பீடம் தன் போக்கை மாற்றாத வரை மூளைசாலிகள் வெளியேற்றம் தவிர்க்க - தடுக்க - முடியாத பிணியாகத் தொடரத்தான் போகின்றது.

# வாழ்வாதார உதவிகள் வழங்கல்!

(எஸ்.கீதபொன்கலன்)



கமத்தொழில் அமைச்சின் நிதிப் பங்களிப்பின் கீழ் வெருகல் பிரதேச செயலர் எம்.ஏ.அனஸ் வழிகாட்டலில் வெருகல் பிரதேச செயலர் பிரிவுக்கு உட்பட்ட 10 கிராம சேவகர் பிரிவிலும் ஆடு வளர்ப்புக்குத் தெரிவு செய்யப்பட்ட 29 பயனாளிகளில் 11 பயனாளிகளுக்கு வாழ்வாதாரமாக ஆடுகள் வழங்கப் பட்டன.

கறுக்காமுனை, இலங்கைத்துறை முகத்துவாரம், வெருகல் மற்றும் இலங் கைத்துறையை சேர்ந்த பயனா ளிகளுக்கே இந்த உதவிகள் வழங்கப் பட்டுள்ளன.

இந்த நிகழ்வில் கமத்தொழில் அமைச்சின் உத்தியோகத்தர்கள், உதவி பிரதேச செயலர், கணக்கா ளர், கால்நடை வைத்திய அதிகாரி (கந்த ளாய்), கால்நடை போதனாசிரியர் (மூதூர்), விவசாய காப்புறுதித் திணைக் கள உத்தியோகத்தர் மற்றும் வெருகல் பிரதேச செயலக உத்தியோகத்தர்கள் கலந்து கொண்டனர்.




# லக்கிய ஆளுமையை உருவாக்கலும் மாணவர்களுக்கான ஊடக செயலமர்வும்

**(எம்.எம்.றம்ஸீன்)**

மூதூர் ஜே.எம்.ஐ. நிறுவனத்தின் ஏற்பாட்டில் பாலின சமத்துவத்தை அடைய அனைத்து பெண்களுக்கும் அதிகாரம் என்ற எண்ணக்கருவை இலக்காகக் கொண்டு 68 பாடசாலை மாணவிகளுக்கு இலக்கியம் மற்றும் ஊடகத்தில் யுவதிகளின் பங்குபற்று தலை ஊக்குவித்தல் என்ற தொனிப் பொருளில் மூதூர் அந்-நஹார் வித்தியாலயத்தில் பயிற்சிப்பட்டறை ஜெ.எம்.ஐ.நிறுவன பணிப்பாளர் ஜே.எம்.இஹ்ஷான் தலைமையில் நடைபெற்றது.

இந்தச் செயலமர்வில் வளவாளராக சிரேஷ்ட ஊடகவியலாளர் கலாநிதி ஏ.எல்.அன்ஸார் , சிலோன் மீடியா வொய்ஸ் பணிப்பாளர் முஹம்மட் ஸிபான் , கவிஞர் ஜவ்ஷான் அஹமட் ஆகியோர் கலந்து கொண்டனர்.

2024 ஆம் ஆண்டுக்கான பெண்களின் ஆளுமை உருவாக்கும் நோக்கில் தொடங்கப்பட்டுள்ள ஒருவருட செயற்றிட்டத்தின் முதல் நிகழ்வு உத்தியோக பூர்வமாக அங்குராப்பணம் செய்யப்பட்டுள்ளது. இதன் தொடர்ச்சியாகப் பல்கலைக் கழக மாணவர்கள் மற்றும் பட்டதாரிக ளுக்கு அடுத்த மாதமளவில் செயலமர்வு ஏற்பாடு செய்யப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

# பெண் தலைமைக் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவிகள் வழங்கல்!

**(ஹஸ்பர்)**

திருகோணமலை பட்டினமும் சூழலும் பிரதேச செயலர் பிரிவில் உள்ள தெரிவு செய்யப்பட்ட பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கான வாழ்வாதார உதவிகள் வழங்கி வைக்கப்பட்டன.


நிகழ்வு கடந்த வெள்ளிக்கிழமை (15) பிரதேச செயலகத்தில் இடம் பெற் றுள்ளது.

பெண்கள் மற்றும் மகளிர் சிறுவர் அலுவல்கள் மற்றும் சமூக வலுபடுத்தல் அமைச்சின் மகளிர் பணியகத்தினால் 10 பெண் தலைமை தாங்கும் குடும்பங்களுக்கு வாழ்வாதார உதவியாக தலா ஒருவருக்கு ஒரு லட்சம் ரூபா பெறுமதி யான பொருள்கள் பட்டிணமும் சூழலும் பிரதேச செயலகத்தின் பிரதேச செயலர் பொ.தனேஸ்வரன் தலைமையில் வழங்கப்பட்டது.

நிகழ்வில் பிரதேச செயலர் பொ. தனேஸ்வரன், உதவிப் பிரதேச செயலர் யு.குமணன், பிரதித் திட்டமிடல் பணிப்பாளர் ஏ.எஸ்.எம்.றியாத், நிர்வாக உத்தியோகத்தர் ஜெயந்தி டெரிக், சமுர்த்தி முகாமையாளர் எஸ்.சிவகுமார், மகளிர் அபிவிருத்தி உத்தியோகத்தர் யு. சாய்சாதனி, கிராம அதிகாரி என்.ஜெய காந்தன் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.







# டிஜிட்டல் தொழில்நுட்ப விருத்தி பயிற்சிப் பட்டறை பெண்களுக்கு

**(எம்.பஹ்த் ஜுனைட், எம்.எம்.றம்ஸீன்)**

காத்தான்குடி ஆய்வுக்கும் மேம்பாட்டுக்குமான இஸ்லாமிய மகளிர் ஒன்றியம் இளைஞர் யுவதிகளுக்கான பல்வேறு வலுவூட்டல் வேலை திட்டங்களை மேற்கொண்டு வருகின்றது.

அந்த வகையில் யுவதிகளின் பாதுகாப்பான வலைத்தள பாவனையை உறுதி செய்வ தோடு டிஜிட்டல் தொழில் நுட்ப அறிவு விருத்தியை ஏற்படுத்தும் நோக்குடன் ஆறு நாள் பாடநெறி ஒன்றை வடிவமைத்து நடத்தி வருகின்றது.

காத்தான்குடி பீச்வே ஹோட்டலில் இந்தப் பாடநெறி இடம்பெற்று வருகின்றது.

டிஜிட்டல் தொழில் நுட்பத்தின் ஊடான பிரச்சார திட்டமிடல் முகாமைத்துவம், வீடியோ எடிட்டிங் , டிஜிட்டல் தொழில் நுட்பத்தினூடாக கதை கூறல், சமூக வலைத்தளங்களைப் பாவிக்கும்போது கவனிக்க வேண்டிய நுட்பங்கள் போன்ற விடயங்கள் யுவதிகளுக்கு கற்பிக்கப்படுகின்றமை குறிப்பிடத்தக்கது.






# ஈரோஸ் அமைப்பின் நிறுவுனர் நினைவேந்தல் மட்டக்களப்பில்

**(பழுவூரான்)**

ஈரோஸ் அமைப்பின் நிறுவுனர் தோழர் இரட்ணசபாபதியின் (ரெட்ணா) 17 ஆவது நினைவேந்தல் நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (17) மட்டக்களப்பு வை.எம்.சீ.ஏ. ஒன்று கூடல் மண்டபத்தில் இடம்பெற்றது.

ஈரோஸ் ஜனநாயக முன்னணி பொதுச் செயலாளர் தோழர் இரா.ஜீவன் இராஜேந்திரன் தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், ஈரோஸ் நிறுவனர் தோழர் ரெட்ணசபாபதியின் உருவப் படத்துக்கு மலர்மாலை அணிவிக்கப்பட்டு ஈகைச்சுடர் ஏற்றப்பட்டது.

இந்த நினைவேந்தல் நிகழ்வில், ஈரோஸ் ஜனநாயக முன்னணியின் தலைவர் இரா.இராஜாராஜேந்திராவின் தொடக்கவுரையோடு கிழக்கு மாகாண சபை முன்னாள் உறுப்பினர் தோழர் சோ.புஸ்பராஜா மற்றும் தோழர்களான திருமதி சுமதி மகேசன், திருமதி கமலினி உட்பட பலர் தோழர் ரெட்ணசபாபதியின் நினைவுகளைப் பதிவு செய்தனர்.



இதன்போது ஈரோஸ் அமைப்பின் பிரதிநிதிகள், பொது மக்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.





# ஒளி விழாவும் கட்டடத் திறப்பும்!

(பழுவூரான்)

ஓசானம் இல்லத்தின் ஏற்பாட்டில் புதிய கட்டடத் திறப்பு விழாவும் ஒளிவிழாவும் நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (17) மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் ஓசானம் இல்லத்தில் இடம்பெற்றன.

மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் ஜோசப் கிங்ஸ்லி சுவாம்பிள்ளை தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், பிரதம விருந்தினராகக் கிழக்கு மாகாண சமூக சேவைகள் திணைக்களப் பணிப்பாளர் கே.இளம்குமுதனும், வீதி அபிவிருத்தி அபிவிருத்தி அதிகார சபை பொறியியலாளர் இ.காண்டீபாவும் கலந்து கொண்டனர்.

இதன்போது ஓசானம் இல்லச் சிறார்களின் பாடல் மற்றும் நடன நிகழ்வுகள் அரங்கேறின. அத்தோடு இல்லச் சிறார்களுக்கு அன்பளிப்புகளும் வழங்கப்பட்டன.

நிகழ்வில் நினைவுக் கல்லைத் திரைநீக்கம் செய்து, கட்டடத்தை மட்டக்களப்பு மறை மாவட்ட ஆயர் கலாநிதி ஜோசப் பொன்னையா ஆண்டகை திறந்து வைத்தார்.

இந்தக் கட்டடத்தை அமரர் திருமதி கங்கேஸ்வரி கந்தையாவின் ஞாபகார்த்தமாக அவரின் குடும்பத்தினர் அமைத்துக் கொடுத்துள்ளனர்.





# சந்திரோதயம் கலை இலக்கிய மன்றத்தின் ஏற்பாட்டில் மட்டக்களப்பில் ‘மலையகம் 200’

(பழுவூரான்)

சந்திரோதயம் கலை இலக்கியப் பெருமன்றத்தினரின் ஏற்பாட்டில் ‘மலையகம் 200’ நிகழ்வு நேற்று முன்தினம் ஞாயிற்றுக்கிழமை (17) மட்டக்களப்பு பொது நூலகத்தின் பேராசிரியர் செ.யோகராசா அரங்கில் இடம்பெற்றது.

கலாநிதி உருத்திரமூர்த்தி யுவராசா தலைமையில் நடைபெற்ற இந்த நிகழ்வில், தொடக்கவுரையைச் சந்திரோதயம் கலை இலக்கியப் பெருமன்றத்தின் தலைவர் சந்திரசேகரன் மணிசேகரமும், பிரதான உரையை முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினரும், கலை இலக்கிய மற்றும் அரசியல் செயற்பாட்டாளருமான ம.திலகராஜும், சிறப்புரைகளை கிராமிய வீதிகள் இராஜாங்க அமைச்சர் சிவனேசதுரை சந்திரகாந்தன், மட்டக்களப்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினர் கோவிந்தன் கருணாகரம், ஈரோஸ் ஜனநாயக முன்னணிச் செயலாளர் நாயகம் ஜீவன் இராஜேந்திரன் உட்பட பல சமூக செயற்பாட்டாளர்கள் ஆற்றினர்.

இதன்போது அரசியல் பிரமுகர்கள், எழுத்தாளர்கள், ஊடகவியலாளர்கள், பல்கலைக்கழக விரிவுரையாளர்கள் மற்றும் மாணவர்கள், சமூக ஆர்வலர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.









# புதிய கட்டடத் திறப்பு விழாவும் கட்டடத்துக்கான கல் நடுதலும்

(கே. எ. ஹமீட்)

திருகோணமலை கிண்ணியா தாயிப் நகர் முஸ்லிம் வித்தியாலயத்தின் முஸ்லிம் கரங்கள் நிறுவனத்தின் நிதியுதவியுடன் நிர்மாணிக்கப்பட்ட புதிய கடடடத் திறப்பு விழாவும் பல் தேவைக் கட்டடத்துக்கான கல் நடும் விழாவும் பாடசாலை அதிபர் தலைமையில் பாடசாலை முன்றலில் வெள்ளிக் கிழமை (15) நடைபெற்றன.

இந்த விழாவில் பிரதம அதிதியாக நாடாளுமன்ற உறுப்பினர் எம்.எஸ். தௌபீக் கலந்துகொண்டு கட்டடத்தைத் திறந்துவைத்தார்.

கௌரவ அதிதிகளாக கிண்ணியா நகர சபையின் முன்னாள் நகரபிதா நிவாஸ் மற்றும் முஸ்லிம் கரங்கள் நிறுவனத்தின் திட்டப் பணிப்பாளர் இல் முதீன் ஆகியோர் கலந்து கொண்டனர்.



விசேட அதிதியாகப் பிரதேச சபை முன்னாள் உறுப்பினர் எம். வை. இமாம்தீன், தம்பலகாமம் உதவிப் பிரதேச செயலர், தம்பலகாமம் பொலிஸ் நிலையப் பொறுப்பதிகாரி, கோட்டக்கல்வி அதிகாரி, உலமாக்கள், பாடசாலை அதிபர்கள், கிராம அபிவிருத்திச் சங்கம், விளையாட்டு கழகங்கள், பள்ளிவாசல் நிர்வாகம், மற்றும் ஊர் பிரமுகர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

# திருமலை செயலகத்தில் ஒளி விழா





(ஹஸ்பர்)

திருகோணமலை மாவட்ட செயலகத்தால் ஏற்பாடு செய்யப்பட்ட ஒளி விழா மாவட்ட அரச அதிபர் சாமிந்த ஹெட்டியாரச்சி தலைமையில் மாவட்ட செயலகபுதிய ஒன்றுகூடல் மண்டபத்தில் நடைபெற்றது.

இதன் போது சிறுவர் சிறுமிகளின் கலை நிகழ்வுகளும் மேடையை அலங்கரித்தன. இந்த நிகழ்வில் கலந்து கொண்டு நிகழ்ச்சிகளை சிறப்பாக வழங்கிய சிறுவர் சிறுமிகளுக்கு மாவட்ட அரச அதிபர் மற்றும் அதிகாரிகளால் நத்தார் பரிசில்களும் வழங்கி வைக்கப்பட்டன.

இந்த நிகழ்வில் மேலதிக அரச அதிபர் ஜே.எஸ். அருள்ராஜ், மேலதிக அரச அதிபர் (காணி) எஸ்.சுதாகரன், மாவட்ட செயலக பதவி நிலை அதிகாரிகள், மாவட்ட செயலக உத்தியோகத்தர்கள், சிறுவர்கள் கலந்து கொண்டனர்.



# ஹிங்குராக்கொட பாடசாலை மாணவியின் புத்தகப் பையினுள் இருந்த விஷப்பாம்பு!

## பாடசாலையில் பெரும் பரபரப்பு

(அஸ்ஹர் இப்றாஹிம்)

ஹிங்குராக்கொட கல்வி வலயத்துக்கு உட்பட்ட நகரிலுள்ள பிரபல பாடசாலையில் தரம் 8 இல் கல்வி பயிலும் மாணவியொருவரின் புத்தகப் பைக்குள் விஷப்பாம்பு ஒன்று இருந்ததில் பெரும் பரபரப்பு ஏற்பட்டுள்ளது.

கடந்த வாரம் பாடசாலைக்கு வருகதந்திருந்த மாணவி புத்தகத்தை எடுப்பதற்காக புத்தகப் பைக்குள் கையை விட்ட வேளை ஏதோவொன்று அசைவதாக உணர்ந்த மாணவி சத்தமிட்டவாறு வகுப்பறையை விட்டு வெளியேறியுள்ளார்.

விடயமறிந்த பாடசாலை அதிபரும், ஆசிரியர்களும் அந்த மாணவியின் புத்தகப் பையை வகுப்பறையை விட்டு வெளியே எடுத்து பார்க்கையில் அதனுள் கறுப்பு நிற விஷப்பாம்பு ஒன்று இருப்பது தெரிய வந்தது.

இந்தப் பாம்பு அந்த மாணவியின் வீட்டிலிருந்தே புத்தகப்பைக்குள் நுழைந்திருக்கலாம் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.



# நற்பிட்டிமுனையில் கௌரவிப்பு!

(பாறுக் ஷிஹான்)

நற்பிட்டிமுனை சமூக சேவைகள் மற்றும் அபிவிருத்திக்கான ஒன்றியம் ஏற்பாடு செய்த நிகழ்வு நற்பிட்டிமுனை அல் அக்ஸா மத்திய மகா வித்தியாலய கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இதன் போது 2023 ஆண்டு தரம் 5 புலமைப் பரிசில் பரீட்சையில் வெற்றி பெற்ற மாணவர்கள், கற்பித்த ஆசிரியர்கள், அதிபர்கள் ஆகியோர் நினைவுச் சின்னம் மற்றும் பரிசில்கள் வழங்கிக் கௌரவிக்கப்பட்டனர்.

நற்பிட்டிமுனை சமூக சேவைகள் மற்றும் அபிவிருத்திக்கான ஒன்றியத்தின் செயலாளர் வீ.ரி.ஹனூன் தலைமையில் கடந்த சனிக்கிழமை இடம்பெற்ற நிகழ்வு கிராஅத் ஓதலுடன் ஆரம்பமானது.

தொடர்ந்து வரவேற்புரை மற்றும் விருந்தினர் உரைகள் இடையிடையே இடம்பெற்றன. அத்துடன் மாணவர்களது கலை நிகழ்வுகளும் அரங்கேற்றப்பட்டன.



சாய்ந்தமருது பிரதேச செயலர் எம்.எம்.ஆஷிக், இலங்கை போக்குவரத்துச் சபையின் கல்முனை சாலை முகாமையாளர் ஜவ்பர், ஓய்வுபெற்ற அதிபர் ஏ.ஏ.கபூர், ஓய்வு பெற்ற ஆசிரியர் யூ.எல்.ஏ.கபூர், அதிபர்களான எம்.எல். பதியுதீன், சி.எம்.நஜீப், திருமதி ஏ.எம். முனாஸிர் உட்பட மேலும் பலர் அதிதிகளாகக் கலந்து கொண்டனர்.

நற்பிட்டிமுனை சமூக சேவைகள் மற்றும் அபிவிருத்திக்கான ஒன்றிய பொருளாளர் ஏ.எல். ஜலில் நன்றியுரை நிகழ்த்தினார்.

# பரீட்சைத் திணைக்கள லொறி மோதி பாதுகாப்பு கடமையில் இருந்தவர் பலி!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

பரீட்சைத் திணைக்களத்துக்குச் சொந்தமான லொறியில் மோதுண்டு பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த சிவில் பாதுகாப்பு படை வீரர் உயிரிழந்துள்ளார்.

கொழும்பு, பெலவத்த பத்தரமுல்லையிலுள்ள இலங்கை பரீட்சை திணைக்கள வளாகத்தினுள் பிரதான நுழைவாயிலில் பாதுகாப்பு கடமையில் ஈடுபட்டிருந்த 36 வயதான களுத்துறையைச் சேர்ந்த சிவில் பாதுகாப்பு படை வீரர் சஞ்ஜீவ குமார, திணைக்களத்துக்குச் சொந்தமான லொறியில் கடந்த சனிக்கிழமை (16) மோதுண்டு உயிரிழந்துள்ளார்.

லொறி வேகக் கட்டுப்பாட்டை மீறியதாலேயே இந்த விபத்து சம்பவித்துள்ளது என்று ஆரம்ப கட்ட விசாரணையில் தெரிய வந்துள்ளது என்று பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

லொறிச் சாரதி கைது செய்யப்பட்டு விளக்க மறியலில் வைக்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பாக பத்தரமுல்ல பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.



# மல்லிகைப்பூ மற்றும் டீசைட் தோட்டங்களில் சிறுத்தை நடமாட்டத்தால் பீதியில் மக்கள்!

(மஸ்கெலியா நிருபர்)

நல்லதண்ணி வன ஜீவராசிகள் அலுவலகத்துக்கு உட்பட்ட மஸ்கெலிய மல்லிகைப்பூ மற்றும் டீசைட் தோட்ட தேயிலை மலைப் பகுதிகளில் சிறுத்தைகள் நடமாட்டம் காணப்படுகிறது. இதனால் இந்தத் தோட்டங்களில் பணி புரியும் மக்கள் பெரம் பீதி அடைந்துள்ளனர் என்று தெரிவிக்கின்றனர்.

கடந்த சில வாரங்களாக இந்தப் பகுதியில் உள்ள குடியிருப்புகளில் வளர்ப்பு நாய்கள் திடீரென இரவு நேரங்களில் சத்தம் இடுகின்றன என்றும் காலையில் பார்க்கும் போது நாய்கள் காணாமல் போகின்றன என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

கடந்த வாரம் இரவு 9 மணியளவில் ஓட்டோ சாரதி ஒருவர் தனது சென்று கொண்டிருந்த வேளையில் இந்தப் பகுதியில் உள்ள பிரதான வீதியில் இருந்து சிறுத்தை ஒன்று தேயிலை மலை பகுதியை நோக்கி பாய்ந்து சென்று பதுங்கிதாகத் தெரிவித்துள்ளார்.

மஸ்கெலியா பிரதான பாதைக்கு அருகில் உள்ள சின்ன சோளங்கந்தை தோட்டத்தில் தேயிலை மலைகள் காடுகளாக காணப்படுகின்றன. அந்த மலைப் பகுதியில் சிறுத்தைகள் பதுங்கி இருந்து வருகின்றன.

மல்லிகைப்பூ, டீசைட் பகுதியில் தேயிலை மலை பகுதிக்கு அருகில் உள்ள மலை ஒன்று மாணாப் புல் காடாக உள்ளது. அந்தப் பகுதியில் சிறுத்தைகள் பகல் வேளையில் பதுங்கி இருந்து இரவு வேளையில் குடியிருப்புப் பகுதிகளுக்கு நடமாட கூடும் என்று மக்கள் தெரிவிக்கின்றனர்.

சம்பந்தப்பட்ட நல்லதண்ணி வன பாதுகாப்பு அதிகாரிகள் இது தொடர்பில் கவனம் செலுத்த முன்வர வேண்டும் எனவும் கோரிக்கை விடுத்துள்ளனர்.



# தென்கிழக்கு பல்கலைக் கழகத்தில் கற்கை நெறிகள் ஆரம்ப நிகழ்வு!

(அஸ்ஹர் இப்றாஹிம்)

தென்கிழக்கு பல்கலைக்கழகத்தில் வணிக நிர்வாக முதுநிலை கற்கை நெறி மற்றும் முகாமைத்துவ முதுகலை உயர் டிப்ளோமா ஆகிய கற்கை நெறிகளை 2022-2023 ஆம் கல்வியாண்டில் தொடர்வதற்காக தெரிவு செய்யப்பட்டுள்ள, 12 ஆவது கட்ட மாணவர் அணியினரை இணைத்துக் கொள்ளும் ஆரம்ப விழா, கற்கைகள் பீடத் தலைவர் பேராசிரியர் கலாநிதி எம்.ஐ.எம். ஹிலால் தலைமையில் வர்த்தக முகாமைத்துவ பீட கேட்போர் கூடத்தில் இடம்பெற்றது.

இந்த நிகழ்வுக்கு உபவேந்தர் பேராசிரியர் றமீஸ் அபூபக்கர் பிரதம அதிதியாக கலந்து கொண்டார்.

நிகழ்வில் வர்த்தக முகாமைத்துவ பீடத்தின் பீடாதிபதி கலாநிதி எஸ். சபீனா விசேட அதிதியாகக் கலந்து கொண்டார்.

கௌரவ அதிதியாகவும் பிரதான பேச்சாளராகவும் நிச்லைப் டயரீஸ் நிறுவனத்தின் தலைமை இயக்குனர் தினேஷ் நல்லையா நிகழ்நிலையில் உரையாற்றினார்.

முதுகலை பிரிவின் இணைப்பாளரும் நிகழ்வின் ஏற்பாட்டாளருமான பேராசிரியர் எஸ். குணபாலன் நன்றியுரை நிகழ்த்தினார்.

இந்தக் கற்கை நெறியைத் தொடர்வதற்கு 25 மாணவர்கள் இணைத்துக் கொள்ளப்பட்டுள்ளனர்.





# மாணவர்களுக்குச் செயலமர்வு

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை வலய குச்சவெளி கல்விக் கோட்டத்தில் அமைந்துள்ள கஷ்டப் பிரதேச பாடசாலையான இறக்கண்டி சிங்கள வித்தியாலயத்தின் இடை நிலைப் பிரிவு மாணவர்களுக்கு “மாணவர்களின் ஊக்கமும் ஆளுமையும்” தொடர்பான முழு நாள் செயலமர்வு நடத்தப்பட்டது.

இந்தச் செயலமர்வின் வளவாளராக ரஜரட்ட பல்கலைக்கழகத்தின் சமூக விஞ்ஞான மனித நேய பீடத்தின் இறுதி யாண்டு மாணவன் சத்சர அபிமானி சமரஜீவ கலந்து கொண்டார்.

ஆசிய மனித உரிமைகள் ஆணைக் குழுவின் ஆலோசனையின் கீழ் திருகோணமலை மாவட்ட கங்கத்தலாவ ஐக்கிய ஊடக மன்றத்தின் வழி நடத்தலில், சட்டத்தின் ஆட்சிக்கான மன்றத்தின் மக்கள் பாடசாலை செயற்றிட்டத்தின் கீழ் இந்தச் செயலமர்வு நடைபெற்றது.

இந்தச் செயலமர்வின் போது, ஊடக மன்றத்தின் சார்பில் உபதலைவர் லக்மல் கே.படுகே, உறுப்பினர் எம்.ஜி.பிரியந்த ஆகியோர் பங்குபற்றினர்.



# கல்குடா வலய மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கல்

(பழுவூரான்)

மட்டக்களப்பு கல்குடா கல்வி வலயத்துக்கு உட்பட்ட பாடசாலைகளில் கல்வி கற்கும் வறுமைக் கோட்டுக்கு உட்பட்ட மாணவர்களுக்கு, சைவக் குருமார் ஒன்றியத்தால் கற்றல் உபகரணங்கள் வழங்கப்பட்டன.

இந்த நிகழ்வு சைவக் குருமார் ஒன்றியத் தலைவர் சிவஸ்ரீ கா.கிருஷ்ண பிள்ளை தலைமையில் சந்திவெளியிலுள்ள கலாசார மண்டபத்தில் இடம் பெற்றது.

அத்தோடு சைவக் குருமார்களுக்கான ஒழுக்கத்தை பேணும் பொருட்டும், சங்கத்தை வளர்சி பாதையில் முன்னெடுக்கும் முகமாகவும் சத்தியப் பிரமாண நிகழ்வும் இடம் பெற்றது.




இந்த நிகழ்வுக்கு அதிதிகளாக சிவஸ்ரீ எம்.சண்முகக் குருக்கள், கிரான் பிரதேச செயலர் எஸ்.ராஜ்பாவு, கல்குடா கல்வி வலய பிரதி கல்விப் பணிப்பாளர் கே.ஜெயவதனன், காலாசார உத்தியோகஸ்த்தர் ப.சிவராம் மற்றும் பிரதேச அதிபர்கள் எனப் பலர் கலந்து கொண்டனர்.






# மூதூர் இந்து இளைஞர் மன்ற காணியில் பெயர்ப் பலகையை அகற்றிய விசமிகள்!

**(எஸ்.கீதபொன்கலன்)**

மூதூர் இந்து இளைஞர் மன்ற காணியில் போடப்பட்டிருந்த பெயர்ப் பலகை விசமிகளால் அகற்றப்பட்டுள்ளது.

இவ்வாறான செயற்பாடு இனங்களுக்கு இடையில் பிரச்சினையை ஏற்படுத்தும் என்றும் மதத் தலைவர்கள் இந்த விடயம் தொடர்பில் கவனத்தில் கொள்ள வேண்டும் எனவும் மக்கள் கோரிக்கை விடுக்கின்றனர்.

இன முறுகலை தோற்றுவித்து அதில் குளிர்காயும் தரப்பினர் இன்ன மும் இருக்கத்தான் செய்கின்றார்கள் என்பது பிரதேச மக்களின் எண்ணமாக உள்ளது.

மூதூர் மணிக்கூட்டு கோபுரத்துக்கு மேற்கு பக்கமாக சுமார் 100 மீற்றர் தூரத்தில் வீதியின் அருகே மூதூர் இந்து இளைஞர் மன்றத்துக்கான அரை ஏக்கர் காணி உள்ளது. இதில் போடப்பட்ட பெயர் பலகையே சேதமாக்கப்பட்டுள்ளது.

இந்தக் காணியை ஏற்கனவே சிலர் போலி ஆவணங்களைக் கொண்டு அபகரிக்க முயற்சி செய்திருந்தனர் என்றும் சுட்டிக்காட்டப்பட்டுள்ளது.

மன்றத்தின் போசகரின் அயராத முயற்சியாலும், பொலிஸாரின் நடவடிக்கையாலும் அது முறியடிக்கப்பட்டிருந்தது என்றும் மக்கள் தெரிவிக்கின்றனர்.

# ஆஸ்திரேலியா பாதுகாப்பு அதிகாரியாக மட்டக்களப்பு இளைஞன் தெரிவானார்

**(வி.ரி.சகாதேவராஜா)**

மட்டக்களப்பு சத்துருக்கொண்டான் கிராமத்தைப் பிறப்பிடமாகக் கொண்ட ஆஸ்திரேலியா மெல்பேனில் வசிக்கும் ஹறி பிரதீபன் ஆஸ்திரேலியா பாதுகாப்பு படையின் புலனாய்வு அதிகாரி பயிற்சிக்கு தெரிவு செய்யப்பட்டுள்ளார்.

திரு திருமதி பிரதீபன் தம்பதிகளின் சிரேஷ்டபுதல்வன் ஹறி பிரதீபன் மிகவும் சிறுவயதில் ஆஸ்திரேலியா பாதுகாப்பு படைக்குத் தெரிவாகி இருந்தார்.

படை அதிகாரி ஹறியை ஆஸ்திரேலியா படை பிரதானிகள் விருது வழங்கிக் கௌரவித்தனர்.




# மன்னார் புனித சவேரியார் பழைய மாணவர் ஒன்று கூடல்

**(மன்னார் நிருபர்)**

மன்னார் புனித சவேரியார் ஆண்கள் கல்லூரியில் கல்வி கற்ற பழைய மாணவர்களை ஒன்றிணைக்கும் முகமாகவும் பாடசாலை அபிவிருத்திக்கு நிதி சேகரிக்கும் முகமாகவும் வருடாந்த பழைய மாணவர் ஒன்று கூடல் எதிர்வரும் 27 திகதி மன்னார் நகர சபை மண்டபத்தில் இடம்பெறவுள்ளது.

பழைய மாணவர்களின் பங்களிப்பை பாடசாலை மட்டத்தில் அதிகரிப்பதுடன் பழைய மாணவர்கள் மத்தியில் ஒன்றிணைவை ஏற்படுத்தும் முகமாக கலை நிகழ்வுகள் மற்றும் இரவு உணவுடன் நிகழ்வு ஒழுங்கமைக்கப்பட்டுள்ளது.

நிகழ்வில் கல்லூரியில் கல்வி பயின்ற அனைத்து பழைய மாணவர்களையும் கலந்து கொள்ளுமாறு பாடசாலை அபிவிருத்தி குழு மற்றும் பாடசாலை பழைய மாணவர் சங்கம் கோரிக்கை விடுத்துள்ளது.

நிகழ்வுக்கான முற்பதிவுக்கும் நிகழ்வு தொடர்பாக மேலதிக தகவல்களை பெறுவதற்கும் 0778580351, (071) 678 0965 ஆகிய தொலைபேசி இலக்கங்களைப் பயன்படுத்துமாறு ஏற்பாட்டுக் குழுவினர் தெரிவித்துள்ளனர்.

## மேலும் 49 எம்.பிக்கள் இன்று இடைநீக்கம்:

# நாடாளுமன்ற வளாகத்தில் எதிர்க்கட்சிகள் போராட்டம்!




மக்களவை மற்றும் மாநிலங்களவையைச் சேர்ந்த 92 எம்.பிக்கள் இடைநீக்கம் செய்யப்பட்டதைக் கண்டித்து நாடாளுமன்ற வளாகத்தில் உள்ள காந்தி சிலை முன் எதிர்க்கட்சி எம்.பி.க்கள் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

காங்கிரஸ் தலைவரும் மாநிலங்களவை எதிர்க்கட்சித் தலைவருமான மல்லிகார்ஜுன கார்கே தலைமையில் நடைபெற்ற இந்தப் போராட்டத்தில் தேசியவாத காங்கிரஸ் தலைவர் சரத் பவார், காங்கிரஸ் முக்கியத் தலைவர் ராகுல் காந்தி, மக்களவை எதிர்க்கட்சித் தலைவர் ஆதிர் ரஞ்சன் சவுத்ரி உள்ளிட்டோர் கலந்து கொண்டனர்.

ஜனநாயகம் முடக்கப்பட்டுள்ளது, எங்களை கூண்டில் அடைக்க முடியாது போன்ற வாசகங்கள் அடங்கிய பதாகைகளை அவர்கள் கைகளில் ஏந்தியவாறு கோஷங்களை எழுப்பினர்.

இந்தச் சம்பவம் குறித்து நாடாளுமன்றத்துக்கு வெளியே செய்தியாளர்களிடம் பேசிய காங்கிரஸ் எம்.பி கார்த்தி சிதம்பரம்,

"எதிர்க்கட்சிகள் இல்லாத நாடாளுமன்றத்தை அவர்கள் விரும்புகிறார்கள். இதை நோக்கியே அவர்கள் செயல்பட்டுக்கொண்டிருக்கிறார்கள்" எனக் குறிப்பிட்டார்.

இதனிடையே, நாடாளுமன்ற மக்களவையில் அமளியில் ஈடுபட்ட மேலும் 49 எம்.பிக்கள் இன்று இடைநீக்கம் செய்யப்பட்டனர். நாடாளுமன்றத்தில் பாதுகாப்பு குறைபாடு தொடர்பாக பிரதமர் மோடி அல்லது மத்திய உள்துறை அமித் ஷா விளக்கம் அளிக்க கோரி அமளி யில் ஈடுபட்டதால், திங்கள்கிழமை மட்டும் காங்கிரஸ் எம்.பி.க்கள் உட்பட எதிர்க் கட்சிகளை சேர்ந்த 45 எம்.பி.க்கள் இடைநீக்கம் செய்யப்பட்டனர்.

ஏற்கெனவே மாநிலங்களவையில் திரிணமூல் காங்கிரஸ் எம்.பி. டெரிக் ஓ பிரையன் கடந்த 14 ஆம் திகதி இடைநீக்கம் செய்யப்பட்டிருந்தார். இதையடுத்து, மாநிலங்களவையில் இடைநீக்கம் செய்யப்பட்ட எம்.பி.க்கள் எண்ணிக்கை 46 ஆக உயர்ந்தது.

இந்நிலையில், மக்களவையில் அமளியில் ஈடுபட்ட மேலும் 49 எம்.பிக்கள் இன்று இடைநீக்கம் செய்யப்பட்டனர். இதனால், ஒட்டுமொத்தமாக இதுவரை இந்தக் கூட்டத் தொடரில் இடைநீக்கம் செய்யப்பட்ட எம்.பி.க்களின் எண்ணிக்கை 141 ஆக அதிகரித்துள்ளது. நாடாளுமன்ற வரலாற்றில், ஒரு கூட்டத் தொடரில் இத்தனை எம்.பி.க்கள் இடைநீக்கம் செய்யப்பட்டது வரலாற்றுச் சம்பவமாக கருதப்படுகிறது.

---

# பிரதமர் மோடியுடன் முதல்வர் இன்று சந்திப்பு: மழை வெள்ள பாதிப்புகள் குறித்து ஆலோசனை



இண்டியா கூட்டணி கூட்டத்தில் பங்கேற்பதற்காக டில்லி சென்றுள்ள முதல்வர் மு.க.ஸ்டாலின், தமிழக கனமழை பாதிப்பு, நிவாரண பணிகள் குறித்து பிரதமரை இன்று சந்தித்து ஆலோசனை நடத்த உள்ளார்.

வங்கக்கடலில் உருவான மிக்ஜாம் புயல் கடந்த 3, 4 ஆம் திகதிகளில் வட தமிழக கடலோர பகுதியை நெருங்கி வந்தது. இதனால் ஏற்பட்ட காற்று, அதிகனமழை காரணமாக சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்கள் பெரிதும் பாதிக்கப்பட்டன. இதையடுத்து, வெள்ள பாதிப்புகள் குறித்து மத்திய பாதுகாப்புத் துறை அமைச்சர் ராஜ்நாத் சிங் பார்வையிட்டு சென்றார். அப்போது, இடைக்கால நிவாரணமாக 5,060 கோடி ரூபா வேண்டும் என்று பிரதமருக்கு முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதினார்.

இத்தகைய சூழலில், பா.ஜ.கவுக்கு எதிராக எதிர்க்கட்சிகள் ஒன்றிணைந்து உருவாக்கியுள்ள இண்டியா கூட்டணியின் கூட்டம் டெல்லியில் இன்று நடக்கிறது. இதில் பங்கேற்பதற்காக முதல்வர் ஸ்டாலின் நேற்று மாலை 3.15 மணிக்கு கோவையில் இருந்து டெல்லி புறப்பட்டு சென்றார்.

இதனிடையே சென்னை, திருவள்ளூர், செங்கல்பட்டு, காஞ்சிபுரம் மாவட்டங்களில் மிக்ஜாம் புயல், கனமழையால் ஏற்பட்ட பாதிப்புகளுக்கு விரைந்து நிதி ஒதுக்க கோருவதற்கும், தற்போது தென் மாவட்டங்களில் பெய்துவரும் அதிகனமழையால் ஏற்பட்ட பாதிப்புகள், மீட்பு, நிவாரண பணிகள் குறித்து எடுத்துக் கூறி ஆலோசிப்பதற்கும் இன்று டெல்லியில் பிரதமர் நரேந்திர மோடியை சந்திக்க நேரம் ஒதுக்க கோரி முதல்வர் ஸ்டாலின் கடிதம் எழுதியிருந்தார்.

இந்த நிலையில் இந்த கோரிக்கையை ஏற்று முதல்வர் ஸ்டாலினை சந்திக்க பிரதமர் நரேந்திர மோடி இன்று நேரம் ஒதுக்கியுள்ளார். இதன்படி டெல்லியில் பிரதமரை முதல்வர் இன்று சந்தித்து பேசுகிறார்.

அப்போது தமிழகத்தில் ஏற்பட்ட மிக்ஜாம் புயல் பாதிப்பு மற்றும் தென் மாவட்டத்தில் கனமழையால் ஏற்பட்டுள்ள பாதிப்புகள் குறித்தும் மீட்பு, நிவாரணம் குறித்தும் இருவரும் முக்கிய ஆலோசனை நடத்தவுள்ளார்.

# சீனாவில் சக்திவாய்ந்த நிலநடுக்கம்: உயிரிழப்புகள் 116 ஆக அதிகரிப்பு



சீனாவின் வடமேற்கு பகுதியான கான்சு மற்றும் கின்காய் மாகாணங்களில் ஏற்பட்ட நிலநடுக்கத்தில் சிக்கி உயிரிழுந்தவர்களின் எண்ணிக்கை 116 ஆக அதிகரித்துள்ளது. நிலநடுக்கத்தின் தாக்கம் ரிக்டர் அளவில் 6.2 ஆகப் பதிவாகியுள்ளது.

நேற்று இரவு நிலநடுக்கம் அங்கு உணரப்பட்டதாக சர்வதேச ஊடகங்கள் உறுதி செய்துள்ளன.

இதன் காரணமாக கான்சு மற்றும் கின்காய் மாகாணங்களில் உள்ள சில கிராமங்களில் மின்சாரம் மற்றும் தண்ணீர் விநியோகம் பாதிக்கப் பட்டுள்ளது.

மீட்புப் பணிகள் இன்று காலை முதல் மேற்கொள்ளப்பட்டு வருகிறது.

இதற்கான உத்தரவை ஜனாதிபதி ஜி ஜின்பிங் பிறப்பித்துள்ளார். இதனால் பெருத்த சேதம் ஏற்பட்டுள்ளதாகவும், வீடுகளில் விரிசல் போன்ற பாதிப்புகள் ஏற்பட்ட காரணத்தினால் மக்கள் வீதிகளில் தஞ்சம் அடைந்ததாகவும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

நிலநடுக்கத்தால் 116 பேர் பலியாகியுள்ள நிலையில், 200 பேர் காயமடைந்துள்ளனர்.

இது தொடர்பாக சமூக வலைதளங்களில் வெளியாகி உள்ள காணொலிகளில், வீடுகளின் மேல் கூரைகள் பெயர்ந்து விழுந்த நிலையிலும், சேதம் மற்றும் இடிந்துள்ள காட்சிகள் பதிவாகி உள்ளன. மீட்புப் பணி துரிதப்படுத்தப்பட்டுள்ளது.

நிலநடுக்கம் ஏற்பட்டிருக்கும் நிலையில், சில கிராமங்களில் இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டிருப்பதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு குடிநீர், போர்வைகள், அடுப்புகள், உடனடி நூடுல்ஸ் உள்ளிட்ட பொருட்களும் அனுப்பி வைக்கப்பட்டன.

தீயணைப்பு மற்றும் மீட்புத் துறையினர் 88 தீயணைப்பு இயந்திரங்களுடன் 580 மீட்புப் பணியாளர்களை பேரிடர் பகுதிக்கு அனுப்பி வைத்திருக்கின்றனர். மீட்பு பணிகள் தீவிரமாக நடைபெற்று வருகின்றன.

# இது அமெரிக்காவினுடைய போர்: பிரதமர் நெதன்யாகு தெரிவிப்பு

இது எங்களுடைய போர் மட்டுமின்றி, பல வழிகளில் உங்களுடைய போரும் கூட என இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு கூறியுள்ளார்.

ஹமாஸ் அமைப்பு, கடந்த ஒக்டோபர் 7 ஆம் திகதி இஸ்ரேல் எல்லைக்குள் புகுந்து அதிரடியாக தாக்குதலில் ஈடுபட்டது. பெண்கள், முதியவர்கள் என பலரையும் துப்பாக்கியால் சுட்டு வீழ்த்தியது. 200 இற்கும் மேற்பட்டோரை பணய கைதிகளாக சிறை பிடித்து சென்றது.

இந்த நிலையில், இஸ்ரேல் பிரதமர் பெஞ்சமின் நெதன்யாகு, அமெரிக்க பாதுகாப்பு அமைச்சர் லாய்டு ஆஸ்டினுடன் இணைந்து கூட்டாக பத்திரிகையாளர் சந்திப்பை நடத்தினர்.



அப்போது, இஸ்ரேலுக்கு அமெரிக்கா ஆதரவளித்து வருவதற்காக தனது நன்றியை தெரிவித்து கொண்டார்.

தொடர்ந்து அவர் கூறும்போது, ”காட்டுமிராண்டித்தனத்திற்கு எதிரான நாகரீகத்தின் போரை நாங்கள் நடத்தி கொண்டிருக்கிறோம்.

நாங்கள் எப்போது பேசுகிறோமோ அப்போது, ஹமாஸ் அமைப்புக்கு எதிராக ஒட்டுமொத்த வெற்றியை பெற வேண்டும் என்ற எங்களுடைய ஈடுபாட்டை நான் மீண்டும் வெளிப்படுத்துகிறேன்” என்று கூறியுள்ளார்.

இது எங்களுடைய போர் மட்டுமின்றி, பல வழிகளில் உங்களுடைய போரும் கூட என நாங்கள் நினைக்கிறோம். ஏனெனில், உலகில் நாகரீகத்தின் சக்தியை நீங்கள் வழிநடத்தி செல்கிறீர்கள் என்று அமெரிக்காவை குறிப்பிட்டு பேசியுள்ளார்.



# மன்னாரில் வெள்ளத்தால் பாதிக்கப்பட்ட மக்களை நேரில் பார்த்த செல்வம் எம்.பி.!

(மன்னார் நிருபர்)

மன்னார் மாவட்டத்தில் பெய்து வரும் கடும் மழை காரணமாக ஏற்பட்டுள்ள வெள்ளப் பெருக்கால் பாதிக்கப்பட்டு இடைத்தங்கல் முகாம்களில் வசித்து வரும் மக்களை நாடாளுமன்ற உறுப்பினர் செல்வம் அடைக்கலநாதன் நேற்று திங்கட்கிழமை (18) மாலை நேரடியாக சென்று பார்வையிட்டார். பாதிக்கப்பட்ட மக்களின் தேவைகளை பூர்த்தி செய்ய உரிய அதிகாரிகளிடம் கோரிக்கை விடுத்தார்.

நாட்டில் தொடர்ந்து பெய்துவரும் மழை காரணமாக மன்னார் மாவட்டத்தில் நான்கு பிரதேச செயலர் பிரிவுகளில் வெள்ள பாதிப்புகள் ஏற்பட்டுள்ளன. மன்னார் மாவட்டத்தில் மொத்தமாக 632 குடும்பங்களைச் சேர்ந்த 2 ஆயிரத்தி 245 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மன்னார் பிரதேசச் செயலர் பிரிவில் 404 குடும்பங்களைச் சேர்ந்த ஆயிரத்து 495 பேர், நானாட்டான் பிரதேச செயலர் பிரிவில் ஒரு குடும்பத்தைச் சேர்ந்த 04 பேர், மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் 175 குடும்பங்களைச் சேர்ந்த 427 பேர், மடு பிரதேச செயலர் பிரிவில் 52 குடும்பங்களைச் சேர்ந்த 119 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மாவட்டத்தில் தற்போது 4 தற்காலிக நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன.

மாந்தை மேற்கு பிரதேச செயலர் பிரிவில் உள்ள தேவன்பிட்டிக் கிராமத்தில் 3 நலன்புரி நிலையங்கள் அமைக்கப்பட்டுள்ளன. இங்கு 131 குடும்பங்களைச் சேர்ந்த 438 பேர் தங்க வைக்கப்பட்டுள்ளனர்.

மடு பிரதேச செயலர் பிரிவில் உள்ள பெரிய பண்டிவிரிச்சான் கிராம சேவையாளர் பிரிவில் 30 குடும்பங்களைச் சேர்ந்த 83 பேர் தங்கவைக்கப்பட்டுள்ளனர்.

இவர்களுக்கான சமைத்த உணவுகள் மற்றும் ஏனைய நிவாரண உதவிகளை பிரதேச செயலகம், கிராம அலுவலர் ஊடாக வழங்கப்படுகின்றது.

இந்த நிலையில் மக்களுக்கான அவசர உதவிகளை பிரதேச செயலகம், மாவட்ட செயலகம், மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு ஊடாக முன்னெடுக்கப்பட்டு வருகின்றது.

இந்த மக்களுக்கு மேலதிக உதவிகள் அந்தப் பகுதிகளில் உள்ள இராணுவம் மற்றும் அரச சார்பற்ற நிறுவனங்களால் வழங்கப்பட்டு வருகின்றன.

தொடர்ச்சியாக நலன்புரி நிலையங்களை மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவு கண்காணித்து வருவதோடு, நலன்புரி நிலையங்கள் உள்ள மக்களின் நலனை கருத்தில் கொண்டு மன்னார் மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவின் நிதி உதவியுடன் இராணுவத்தினரால் தற்காலிக மலசல கூட தொகுதி அமைக்கப்பட்டு வருகின்றது.



# முல்லையில் சீரற்ற காலநிலை; 412 குடும்பங்கள் இடம்பெயர்வு!

(ந.லோகதயாளன்)

முல்லைத்தீவு மாவட்டத்தில் நிலவும் சீரற்ற காலநிலையால் அனைத்து குளங்களும் நிறைந்து அதிகளவான நீர் வான் பாய்கிறது. இந்த நிலையில் 412 குடும்பங்களைச் சேர்ந்த 1215 பேர் இடப்பெயர்ந்து இடைத் தங்கல் முகாம்களில் தங்கியுள்ளனர்.மாவட்டத்தின் பிரதான குளங்கள் அனைத்தும் வான்பாய்வதால் அனைத்துப் பிரதேசங்களும் வெள்ளத்தில் மூழ்கியுள்ளன.

இதேநேரம் வெள்ளம் காரணமாக மாவட்டம் முழுவதும் 2 ஆயிரத்து 13 குடும்பங்களைச் சேர்ந்த 6 ஆயிரத்து 377 பேர் பாதிக்கப்பட்டுள்ளனர் என்று சுட்டிக் காட்டப்படுகின்றது.

இந்த நிலையில் 127 குடும்பங்களைச் சேர்ந்த 412 பேர் உறவினர்கள் வீடுகளில் தஞ்சம் அடைந்துள்ளனர் என்று மாவட்ட அணர்த்த முகாமைத்துவப் பிரிவு குறிப்பிட்டிடுகின்றது.



# சிறுவர் அபிவிருத்திக் கூட்டம் திருகோணமலை செயலகத்தில்

(எஸ்.கீதபொன்கலன்)

திருகோணமலை மாவட்ட சிறுவர் அபிவிருத்திக்குழுக் கூட்டம் மாவட்ட செயலகத்தில் நடைபெற்றது.

மாவட்ட அரச அதிபர் சமிந்த ஹெட்டியாராச்சி தலைமையில் நடைபெற்ற இந்தக் கூட்டத்தில் சிறுவர்கள் மாவட்டத்தின் பல்வேறு கிராமப் பகுதிகளில் எதிர்நோக்கும் உடல் மற்றும் உளம் சார்ந்த பிரச்சினைகள் தொடர்பில் கூடிய கவனம் செலுத்தப்பட்டது.

சிறுவர்கள் குடும்பத்தில் எதிர்கொள்ளும் பல்வேறு சவால்களால் கற்றல் செயல்பாடுகளில் இருந்து இடைவிலகும் நிலைமைகள் குறித்தும் நீண்ட கலந்துரையாடல் நடைபெற்றது.

இந்தக் கூட்டத்தில் குச்சவெளி பிரதேச செயலர் மற்றும் சிறுவர் அபிவிருத்தி அதிகாரிகள், பொலிஸ் அலுவலர்கள் ஆகியோர் கலந்து கொண்டு சிறுவர் பாதுகாப்பு மற்றும் அபிவிருத்தி தொடர்பில் பயன்மிக்க கருத்துகளை கூறினர்.



# மருதமுனை பிரதேச ஆஸ்பத்திரிக்கு திகாமடுல்ல மாவட்ட எம்.பி. விஜயம்

(எம்.எம்.றம்ஸீன்)

திகாமடுல்ல மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினரும், கல்முனை பிரதேச அபிவிருத்தி ஒருங்கிணைப்புக் குழுத் தலைவருமான சட்டத்தரணி எஸ்.எம்.எம்.முஷாரப் மருதமுனை பிரதேச வைத்தியசாலைக்கு விஜயம் செய்து வைத்தியசாலையின் குறைபாடுகளைக் கேட்டறிந்தார்.

வைத்தியசாலை அபிவிருத்திக் குழுவால் ஏற்பாடு செய்யப்பட்ட நிகழ்விலும் கலந்து கொண்டார்.



மருதமுனை பிரதேச வைத்தியசாலையின் வைத்தியப் பொறுப்பதிகாரி டாக்டர் மிஹ்லார் தலைமையில் இடம்பெற்ற இந்த நிகழ்வில் கல்முனை பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி டாக்டர் சஹீலா இஸ்ஸதீன், நாடாளுமன்ற உறுப்பினரின் இணைப்பாளர் பீ.எம்.எம்.ஜஃபர் உட்பட பலரும் கலந்து கொண்டனர்.